Sastras and Marriage Legislation.

by Mr. V. Panchapagesa Ayyar of Sengalipuram

written in 1929.

சாஸ்திரங்களும் விவாகச் சட்டங்களும்

செங்காலிபுரம் ஸ்ரீ V. பஞ்சாபகேச அய்யரால்

1929-ல் எழுதப்பட்டது.

T016822
Sarasvati Mahal Library. Thanjavur

1955

ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகள் அபிப்ராயம்

முகாம் – காஞ்சீபுரம், 13—9—55.

*   *   *

"இப்புஸ்தகம் உண்மையில் மனுஷ்ய வர்க்கத்திற்கே உபகாரம் செய்யக்கூடியதாக இருக்கிறது".

முகவுரை.

1929-ம் ஹு சாரதா சட்டம் உதயமான சமயம் "சாஸ்திரங்களும் விவாகச் சட்டங்களும்" என்ற தலைப்பில் என்னுல் ஒரு வியாசம் எழுதப்பட்டு அது **ஆஸ்திக பிராமணன்** என்ற மாதாந்திர பத்திரிகையில் தமிழிலும், "The Brahman" என்ற பத்திரிகையில் ஆங்கிலத்திலும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அச்சட்டத்தை நிறுத்த என் வியாசத்துக்குப் போதுமான சக்தியில்லை. சட்டம் நிறைவேறிவிட்டது.

பிறகு தேசத்தில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. அரசாங்கமே மாறி குடியரசு வந்துவிட்டது. மத விஷயங்களில் குடியரசு தலையிட்டு விவாக சம்பந்தமாயும் இன்னும் பல சட்டங்களை நிறைவேற்றிவிட்டது.

அவ்வியாசத்தை இப்போது பிரசுரிப்பதால் என்ன பிரயோஜனமென்று பலர் வினவலாம். ஆம், நேர்முகமாய் பிரயோஜனமில்லைதான். ஆனாலும் இந்த 26-ஹுங்களில் பிராம்மண குடும்பங்களில் ஏற்பட்டிருக்கும் விபரீதங்களை நிதானித்துக்கொள்ள இது உபயோகமாயிருக்கலாம். மற்றும் அவ்வியாசத்தில், வகுப்புப் பிரிவினை, ஸம்ஸ்கிருதக் கல்வி, ஆரம்பக் கல்விமுறை இவைகளைப்பற்றியும் விவாதிக்கப்பட்டிருக்கிறது.

மஹாகவி பவபூதி மாலதி மாதவத்தை எழுதுகையில்,

उत्पत्स्यते मम तुकोऽपि समानधर्मा कालोह्ययं निरवधिर्विपुला च पृथ्वी ।

"காலமும் உலகமும் எல்லையற்றிருப்பதால், எப்போதாவது எங்கேயாவது இது உபயோகிக்கப்படலாம்" என்றார்.

சமீபத்தில் சட்ட சபைகளில் நடந்த விவாகச் சட்ட விவாதங்களைப் படித்ததிலிருந்து, அத்திருத்தங்கள் கேடுவிளைவிக்கும் என்பதை பலர் உணர்ந்திருப்பதாகவும் கட்சிக் சட்டுப்பாட்டை மீறமுடியாமல் வோட் செய்ய நேர்ந்ததாகவும் ஊகிக்க இடமிருக்கிறது.

இந்த 26-வருஷங்களில் மற்றொரு முக்கிய மாறுதல் காணப்படுகிறது. பிரும்மணர்களில் பலர், ஜீவனத்தையோ பெருமையையோ உத்தேசித்து, தங்கள் ஆசாரங்களைப் புறக்கணித்து, எல்லாவிதத்திலும் மற்றவர்களாகவே, தங்களைக் கருதுமாறு முன்வந்தார்கள். ஆனால் மற்றவர்கள் இவர்களை ஏற்க மறுத்து ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள். இதிலிருந்து பிரும்மணர்களுக்குள் முன் எப்போதும் காணப்படாத ஓர் உணர்ச்சி இப்போது காணப்படுகிறது. இது வலுத்து, பார்ஸிகள், முஸ்லீம்கள், கிருஸ்தவர்கள் இவர்களைப்போல் பிராம்ஹணர்களையும் ஓர் மைனாரிட்டியாக வகுத்து, மத விஷயங்களில் பொதுச் சட்ட சபைகள் செய்யும் சட்டங்கள் இவர்களையும் பாதிக்காவண்ணம் ஏன் செய்துகொள்ளக் கூடாதென்ற எண்ணம் எனக்கு உதித்தது.

இத்தியாதி காரணங்களால் அவ்வியாசத்தை மறுபடி பிரசுரிக்கலாமோவென்றெண்ணினேன். ஜகத்குரு ஸ்ரீமச்சங்கராசார்யரவர்களின் அனுமதியும் கிடைத்தது. ஆகையால் பிரசுரிக்கலானேன்.

அசல் வியாசத்திலிருந்து சில பகுதிகளை விலக்கி அப்படியே பிரசுரிக்கப்படுகிறது.

சேங்காலிபுரம்,
1—8—55.

வா. பஞ்சாபகேசய்யர்.

உ

சாஸ்திரங்களும், விவாகச் சட்டங்களும்.

சேங்காலிபுரம் ஸ்ரீமான் வி. பஞ்சாபகேசய்யர்.

(1929ம் ௵ ஆஸ்திக பிராம்மணன் என்ற பத்திரிகையில் எழுதியது.)

* * * *

சாஸ்திரங்கள்

பிரத்தியட்சத்தில் காணப்படும் இவ்வுலக சாதனங்களில் அதிக அனுபவமும் தேர்ச்சியும் வாய்ந்த மேல்நாட்டு நாகரீகம், இகத்தை வெறுத்து பரத்தைத் தேடும் இத்தேசத்தாரிடமிருந்த அடுப்புமூட்டும் சாதனத்தை முதற்கொண்டு தன் வசப்படுத்திக்கொண்டதுபோல், அபார சக்தியுள்ள மூளைகளையும் தன்வசம் இழுத்துக்கொண்டுவிட்டது. இல்லாவிடில் இந்த இருநூறு வருஷங்களில் பல கம்பரும் காளிதாசரும் தோன்றியிருக்கவேண்டும். அச்சாபீஸ்கள் இல்லாமலேயே வேதங்களும் ஸ்மிருதிகளும் புராணங்களும் மற்றும் எண்ணிறந்த சாஸ்திரங்களும் எத்தனையோ இடுக்கண்களைத் தாண்டி இதுவரை மிஞ்சியிருக்கின்றன. ரிக்வேதம் முதலியவற்றைக் கற்று, மேற்கு தேசத்தாருக்கு உபயோகப்படும் வண்ணம்செய்த மாக்ஸ் முல்லர் என்னும் மேல்நாட்டுப் பெரியவர், கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலை யதீனத்தின் கீழ், இந்தியன் சிவில் சர்வீஸ் வர்க்கத்தாாகளுக்குச் செய்த உபந்நியாசமொன்றில் அவ்விஷயமாய் பின்கண்டவாறு சொல்லியிருக்கிறார்:

"ரிக் வேதம் மட்டில் 10508 சுலோகங்களும் ஏறக்குறைய 153826 பதங்களுமுள்ளன. கி.மு. 1500 வருஷங்களிலிருந்து (இப்போதுதான் ரிக்வேதம் உண்டானதாக இவர் அபிப்ராயம்) கி. பி. 1500 வருஷம் வரையில் மூவாயிரம் வருஷங்களாக அது எப்படிக் காப்பாற்றப்பட்டது?

முழுவதும் ஞாபகத்தாலேயே. இது உங்களைத் திடுக்கிடச் செய்யும். அதில் சந்தேகமிருந்தால் இந்த நிமிஷத்திலும் அதை நேரில் அறிந்துகொள்ளலாம். எல்லா ரிக் வேத புஸ்தகங்களும் இப்போதே இழக்கப்பட்டுவிட்டாலும் இந்தியாவிலுள்ள சுரோத்ரியர்களின் ஞாபகத்திலிருந்து ரிக் வேதம முழுவதையும் நாமடைந்துவிட முடியும்"

இவர் ரிக் வேதத்தைப்பற்றிச் சொன்னது மற்றைய எல்லா கிரந்தங்களுக்குமே பொருந்தும். இப்போதைய நிலைமையிலோ அச்சு இயந்திரம், மை, காகிதம் முதலியவைகளில்லாவிட்டால் பூர்விக நூல்களை எப்படிக் காப்பாற்றுவது என்று கவலைப்படவேண்டிய நிலைமையிலிருக்கிறோம்.

ஆனாலும் சில காலமாக ஆங்கிலம் படித்து மேல்நாட்டு நாகரிகத்திலுழன்று வந்த அநேகம் புத்திமான்கள் அவற்றிலுள்ள அனுபவ பூர்வமான கெடுதிகளை உணர்ந்துவரத் தலைப்பட்டிருக்கிறார்கள். ஆங்கிலேயர்களிலும் சில மகான்கள் இதை வாய்விட்டுச் சொல்லுகிறார்கள். ஸர் டோனியல் ராஸ் என்ற ஒருவர் பின்கண்டபடி பத்திரிகைப் பிரதிநிதியிடம் கூறியதாக 1929 ஜனவரி 5-ந்தேதியுள்ள லண்டன் தந்திச் செய்தியொன்று பத்திரிகைகளில் பிரசுரமாயிருந்தது.

அவர் கூறியதாவது:— "கீழ்நாட்டு தேசங்கள் மேல்நாட்டுப் பழக்க வழக்கங்களில் மோகம்கொண்டு அவ்விதம் மாறுதலடைவதைக் குறித்து எனக்கு நடுக்கமேற்படுகிறது. * * * * ஆனால் மேல்நாட்டு நாகரீகம் பரவுவதனால் பர்ஷியாவுக்கும் மற்ற கீழ்த்திசைத் தேசங்களுக்கும் இயற்கையாகவுள்ள அழகும் வாழ்க்கையின் மேன்மையும் கெட்டும்விடுமேயென்ற வருத்தம் எனக்கேற்படுகிறது"

இவ்விதம் மேல்நாட்டு நாகரீகமடைந்த இந்தியர்களே மூட நம்பிக்கையென்றும் அநாகரீக வழக்கமென்றும் நிந்தித்த பல சாமான்ய விஷயங்களை மேற்கு தேச நிபுணர்கள் பல வருஷங்களாக சிரமப்பட்டு ஆராய்ச்சிசெய்து அவைகளில் உண்மை இருப்பதாகக் கண்டுபிடித்துக்கொண்டு வருகிறார்கள்.

புக்காரஸ்டு சர்வ கலாசாலையைச் சேர்ந்த மிஸ்டர் மீர்சிலீயா எலேட் என்ற ஒருவர் தத்துவஞான சாஸ்திரத்தைப்பற்றியும் முக்கியமாய் யோகம் தந்திரம் இவைகளைப்பற்றியும் கற்பதற்காக இந்தியாவுக்கு வந்திருப்பதாயும் அவர்,

"இந்திய தத்துவஞானத்திலிருந்து தான் கீழ்நாட்டுத் தத்துவஞானம் பெரிதும் தோன்றியிருக்கிறது. நாங்கள் தற்கால தத்துவஞானம் என்று அழைப்பனவற்றில் பெரும் பாகத்தை இந்திய தத்துவ ஞானிகள் பெரிதும் ஊகித்து முன்னரே கூறியிருக்கின்றார்கள். தத்துவஞானம், மதம் ஆகிய விஷயங்களைப்பற்றி இந்தியா ஐரோப்பாவிற்கு எவ்வளவோ போதிக்கவேண்டியிருக்கிறது. ஐரோப்பிய தத்துவ ஞானிகள் இந்தியாவிற்கு வந்து அதன் உன்னதமான எண்ணங்களை ஆராய்ச்சி செய்யக்கூடிய காலம் வந்துவிட்டதென்று நம்புகின்றேன்"

என்று சொன்னதாயும் சமீபத்தில் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. சில வருடங்கட்கு முன் வைத்திய விஷயமாய் அபிப்பிராயம் சொன்ன ஒரு பெரியவர் "இந்தியாவின் ஆயுர்வேத சாஸ்திரத்தின் ஆரம்பம் எதுவோ அதிலேயே மேல் நாட்டு வைத்தியத்தின் கடைசி பாடம் இன்னுமிருக்கிறது" என்று சொன்னார். இது எல்லாவற்றிற்குமே பொருந்தும்.

புத்திமான்களாயிருந்து நிஷ்பட்சபாதமான நிலைமையில் யோசிப்பார்களேயானால் பூர்வீக மகரிஷிகள் லௌகிக

நடவடிக்கைகளுக்கு விதித்திருப்பவையெல்லாம் ஆரோக்கியத்தை முக்கிய நோக்கமாகக்கொண்டவையென்றே கண்டுகொள்வார்கள். சாஸ்திர விதிகள் நன்கு அனுஷ்டிக்கப்பட்ட முன் காலத்திலிருந்தவர்கள் த்ருடசரீரிகளாக வெகு காலம் ஜீவித்திருந்தார்களென்பதும், அனுஷ்டானங்கள் குறையவே இப்போதைய இந்தியரின் சராசரி வயது குறைந்து பலமற்றவர்களாயிருப்பதும் புதிது புதிதான வியாதிகள் தோன்றுவதும் நிதர்சனமாயிருக்கின்றன. மேலநாட்டு ஆராய்ச்சியின் பலனாக வரும் ஒவ்வொரு முடிவும் நமது மகா ரிஷிகளின் வெகு காலத்துக்கு முந்திய சித்தாந்தங்களை உறுதிசெய்வனவாகவே இருக்கின்றன. மனு ஸ்மிருதியின் அடியிற்கண்ட சுலோகங்கள் இங்கு குறிப்பிடத்தக்கன.

आचाराल्लभतेह्यायुराचारादीप्सिताः प्रजाः ।
आचाराद्धनमक्षय्यमाचारोहन्त्यलक्षणम् ॥
दुराचारो हि पुरुषो लोके भवति निन्दितः ।
दुःखभागी च सततं व्याधितोऽल्पायुरेव च ॥

"சாஸ்திரங்களின்படி அனுஷ்டிப்பதாலேயே தீர்க்காயுசும் நல்ல சந்ததிகளும் பொருளும் அவலட்சண நிவர்த்தியுமுண்டாகிறது. விரோதமான ஆசாரமுள்ளவன் வெறுக்கப்படுவதுடன் எப்பொழுதும் துக்கமுள்ளவனாகவும் வியாதியுள்ளவனாகவும் குறைந்த ஆயுளுள்ளவனாகவுமாகிறான்" என்று இந்த சுலோகங்களின் பொருள். வேதங்களிலுள்ள விதிகளை எல்லாம் திரட்டி இலகுவில் அறிந்துகொள்ளும்பொருட்டு மகரிஷிகள் ஸ்மிருதிகளைச் செய்திருக்கிறார்கள். இவைகளே நமது ஆசார விவகாரங்களுக்கு மூலங்கள். அவைகளுள் முதலாவதாகவும் முக்கியமானதாகவுமிருப்பது மனு ஸ்மிருதி. "மனு எது சொன்னாரோ அது மருந்து" என்று வேதம்

சொல்லுகிறது. எல்லாவித அழகும் பெருமையும்வாய்ந்த ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸ்ரீ ராமன் ஒரு முக்கிய சந்தர்ப்பத்தில் தன் நடத்தைக்கு ஆதாரமாக மனு ஸ்மிருதியின் இரண்டு சுலோகங்களைக் காட்டி, அவைகளை:

चारित्र वत्सलौ

நன்னடத்தைக்கு இன்றியமையாதவை:

गृहीतौ धर्मकुशलैः

தர்மத்தில் தேர்ந்தவர்களாலனுஷ்டிக்கப்பட்டவையென்று குறிப்பிட்டதாக வால்மீகி எழுதியிருக்கிறார்.

இப்படிப்பட்ட மனு ஸ்மிருதியை அவரின் சந்ததியாரெனச் சொல்லப்படும் நம்மில் ஒரு சாரார் "விளக்கெண்ணையைக் கண்டு குழந்தைகள் வெறுப்பதுபோல்" வெறுக்கிறார்கள். மனு பட்சபாதமாய் ஒரு வகையாரை உயர்த்தியும் ஸ்திரீகளைத் தாழ்மைப்படுத்தியும் சட்டமியற்றியிருக்கிறாரென்று குறை கூறப்படுகிறது. ஆனால் அதில் எழுதப்பட்டிருப்பவைகளை முற்றிலும் உணர்ந்துகொள்ளவில்லையென்று இவர்கள் கூற்றுகளிலிருந்தே விளங்கும். இவர்கள் எவர்களை உயர்த்திருப்பதாய்க் கூறுகிறார்களோ அவர்களுக்கு மனு விதித்திருக்கும் கடுமையான கடமைகளையும் நிர்ப்பந்தங்களையும் இவர்கள் கண்டறிந்தவர்களில்லை. உலகம் சுபிட்சமாயிருக்கவேண்டி ஒரு சிலர் கஷ்டப்படவேண்டுமென்பது உலக அனுபவம். அந்த நோக்கங்கொண்டே ஒரு வகுப்பார் வேறுவித ஜோலியன்னியில் கர்மாக்களைச் செய்யவேண்டுமென்று மனு கட்டளையிட்டிருக்கிறார். இவ்வபிப்பிராயத்தையொட்டியே திருவள்ளுவ நாயனாரும் "அந்தணரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலான்" என்றார்.

மாக்ஸ் முல்லர் இந்தியா அந்நியரால் படையெடுக்கப்பட்டு ஜயிக்கப்பட்டால் என்ன நேருமென்பதைப்பற்றிப் பின்கண்டவாறு சொல்லுவதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது யுக்தமாயிருக்கும். அவர் சொல்லுவதாவது:—

"படையெடுத்தவர்கள் கோட்டை கொத்தளங்களை வசப்படுத்திக்கொண்டு பழைய ராஜாக்களைத் தள்ளியாவது, அல்லது அவர்களைத் தங்களது சிறையாளர்களாகவாவது ஏஜண்டுகளாகவாவது செய்துகொள்வார்கள். மற்றவையெல்லாம் முன்போலவே நடக்கும். வாடகைகள் செலுத்தப்படும்; வரிகள் வசூலிக்கப்படும். கிராமத்தார்களுடைய, அதாவது இந்தியா தேசத்தினரின் பெரும் பாகத்தினருடைய, ஜிவனம் கவர்ன்மென்டின் மாறுதலால் அநேகமாகப் பாதிக்கப்படாமலேயே நடக்கும். ஆனால் ஒரே ஒரு வகையார்மட்டில் அதாவது ஆசார்ய வகுப்பார் (பிராம்மணர்கள்) துன்பப்படவேண்டியவர்களாவதோடு ஜயித்தவர்களுக்கு உடன்பட்டோரா விடில் எப்போதும் துன்பம் அனுபவிக்கவேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள். மேலும் ஆசார்ய வகுப்பாரே அனேகமாக கல்விக்குப் பாத்திரர்களாகவிருப்பதால் தங்களது போஷகர்களான பழைய ராஜாக்கள் மறைந்ததிலிருந்து கல்வி சம்பந்தமான முயற்சியே ஒரு காலத்துக்கு முற்றிலும் நின்றுவிடுகிறது"

(குறிப்பு:—இது எழுதி 26-வருஷங்களுக்குப் பிறகு குடியரசு கிடைத்து இப்போது அனுபவிப்பதை ஒப்பிட்டு பார்க்கவும்.)

ஸ்திரீ சுதந்திரம்

ஸ்திரீகளைத் தாழ்மைப்படுத்தி அவர்களுக்கு புருஷர்களுக்குச் சமமான சுதந்தரமளிக்கவில்லையென்பது மற்றொரு குற்றம். ஈசுவர சிருஷ்டியில் வெவ்வேறு காரியங்களுக்கென்று

ஸ்திரீ புருஷர்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். புருஷர்களுக்கு வலுவான சரீராவயவங்களும், ஸ்திரீகளுக்கு மெலிந்த சரீராவயவங்களும் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. ஆகவே ஸ்திரீகளை சுகமாய் வைத்து ரட்சிக்கப் புருஷர்கள் கடமைப்பட்டவர்கள் என்று விதித்திருப்பது இயல்பேயாகும். ஸ்திரீகளை தாழ்மைப்படுத்திவிட்டதாக மனுவைக் குற்றம் சாட்டுபவர்கள் மனுவின் கீழ்கண்ட சுலோகத்தைக் கவனிப்பார்களாக!

प्रजानार्थं महाभागाः पूजार्हा गृहदीप्तयः ।
स्त्रियः श्रियश्च गेहेषु न विशेषोऽस्ति कश्चन ॥

"ஸ்திரீகள் மகா பாக்யசாலிகள். புருஷர்களால் ஆராதிக்கத் தகுந்தவர்கள். வீட்டுக்கு வெளிச்சம்போன்றவர்கள். இல்லறத்தில் மகா லட்சுமிக்கும் இவர்களுக்கும் வித்தியாசமொன்றுமேயில்லை" என்று மனு சொல்லுகிறார். ஸ்திரீகளின் கடமையைப்பற்றித் திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளிய பின்கண்ட இரு குறள்களும் இவ்விடம் குறிப்பிடத் தக்கவை.

"தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை" 4

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" 5

பிறதெய்வத்தை வணங்காது கணவனைத் தொழுதெழுபவள் பெய்யென்று சொல்ல மழைபெய்யும். கற்பையும் கணவனையும் நற்குண நற்செயல்களையும் காப்பாற்றுபவளே மனையாள் என்பது இவைகளின் பொருள்.

சென்னையில் கவர்னராயிருந்த ஸர்தா மஸ்மன்ரோ என்றவர் இந்திய ஐரோப்பிய நாகரீகத்தைப்பற்றி சொல்லுமிடத்து ஸ்திரீகளைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிருர். அவர் எழுதியிருப்பதாவது:—

"விவசாயத்தில் ஒரு நல்ல முறையும் இணையற்ற கைத்தொழில்சாமர்த்தியமும், வசதிக்கோ, சுகத்துக்கோ வேண்டுவதை உண்டுபண்ணிக்கொள்ளும் திறமையும், படித்தல், எழுதல், கணக்கு இவைகளை போதிக்கக் கிராமங்கள்தோறும் பள்ளிக்கூடங்களிருப்பதும், பரஸ்பரம் மரியாதையும் தர்ம சிந்தனையுமுடையதாயிருப்பதும், எல்லாவற்றையும் காட்டிலும் மேலானதாக, ஸ்திரீகளை முழு நம்பிக்கையோடும், மரியாதையோடும், மேன்மையோடும் நடத்துவதும், நாகரீகமடைந்த ஜனங்களின் அடையாளமானல், அப்போதும் ஹிந்துக்கள் ஐரோப்பிய சமூகங்களுக்குக் கீழ்பட்டவர்களல்ல. நாகரீகமென்பது இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் ஒரு வியாபாரச் சரக்காகவிருக்குமானல் இறக்குமதியாகும் சரக்கிலிருந்து இங்கிலாந்து லாபமடையுமென்பதை நான் உணர்கின்றேன்"

ஸர் மன்ரோவின் அபிப்பிராயப்படியே இத்தனை வருஷங்களுக்குள் இங்கிலாந்து இந்த வியாபாரத்தில் லாபமடைந்துவிட்டது. பிறர் அபகரிப்பதிஞல் குறைவடையாத சில சரக்குகள் மட்டில் இன்னமும் பாக்கியிருக்கின்றன. அவைகளுள் ஸ்திரீகளை மேன்மையாக நடத்துவதும் ஒன்று. ஆனல் தற்காலம், நம்மவர்களிலேயே சிலர் இதையும் கைநழுவவிடப் பார்க்கிருர்கள். மேற்கு தேசத்தாரைப் பார்த்து, நமது ஸ்திரீகளும் புருஷர்கள்மாதிரி ஓடியாடித் திரிந்து பணம் சம்பாதிக்க வேண்டுமென்றர், புருஷர்கள் உலக விவகாரத்தில்படும் அல்லல்களையெல்லாம் இவர்களும் பங்கு போட்டுக்கொள்ள

வேண்டுமென்றும் விரும்புகிறார்கள். இதற்குமேல் இதை விவரிக்கத் தேவையில்லை.

வகுப்புப் பிரிவினை

இத்தேசத்தில் எங்குமில்லாத ஒரு வகுப்புப் பிரிவினையை ஏற்படுத்தி அதை ஸ்திரப்படுத்திவிட்டதன்மூலம் தேச முன்னேற்றத்துக்கு ஒரு பெரிய இடையூறு விளைவித்துவிட்டதாக மகரிஷிகள்பேரில் மற்றொரு பெரிய குற்றம் சுமத்தப்படுகிறது. இப்பிரிவினையைத் தேச முன்னேற்றத்துக்கு இடையூறென்று கருதுபவர்கள், பணக்காரன்—ஏழை—முதலாளி—தொழிலாளி, எஜமான்—வேலைக்காரன், மனிதன்—மிருகம் இவைபோன்ற எத்தனையோ பிரிவுகளும உட்பிரிவினைகளுமிருந்தே எல்லாக் காரியங்களும் நடைபெறுகின்றனவென்பதை உணர்கிறார்களில்லை. உலகத்திலுள்ள எந்த தேசத்தையாவது, எந்த ஜாதியையாவது, எந்தப் பொது ஸ்தாபனத்தையாவது எடுத்துக்கொண்டு பார்த்தாலும், எதிலும் ஒரு பாகுபாடு இல்லாமலில்லையென்றும், அவ்விதமில்லாவிடில் ஒன்றும் சரிவர நடைபெறாதென்றும் கண்டுகொள்ளுவார்கள். உதாரணமாக நமது அரசாங்கத்தையே பார்த்துக்கொள்ளட்டும். அதில் பலவித வகுப்புப் பாகுபாடுகளும் வரயறைகளுமில்லாவிடில் அரசாட்சி சரிவர நடைபெறாது. ஒரு நிர்வாக அதிகாரி ஒரு எஞ்சின் ஓட்டியின் வேலையைச் செய்வதென்றால் என்ன விளையும்? இவ்வகுப்புப் பிரிவினை தேச முன்னேற்றத்துக்கு இடைஞ்சலானால் பிரதி மனிதனும் பலவிதமாய் வித்தியாசப்பட்டிருப்பதும், ஒவ்வொருவரும் வெவ்வேறு காலத்தில் பிறப்பதும், இறப்பதும், தனித்தனி இடத்தில் வசிப்பதும், வெவ்வேறு விதமாய் உண்பதும், உறங்குவதும், வெவ்வேறு தொழிலைச் செய்வதும் ஆகிய இவைபோன்றவையெல்லாம் இடைஞ்சலாகவேயிருக்கவேண்டும். இவ்வகுப்புப பாகுபாடு

கள் ஜனங்கள் திருப்தியுடன் வாழ்வதற்கு இன்றியமையாததே யாகும். அநாதிகாலமாய் அனுஷ்டித்துவந்து சாதாரணமாய் ஒருவனைப் பார்த்த மாத்திரத்தில் இன்ன வகுப்பைச் சேர்ந்தவன் என்று சொல்லிவிடக்கூடிய விதமாய் ஊன்றிப்போயிருக்கிறது. இம்மாதிரி பாகுபாட்டின் ஆரம்ப ஸ்திதிக்கே வராமலிருக்கும் ஒரு தேசத்தாரைப் பார்த்து, அம்மாதிரி நாமுமிருக்கவேண்டுமென்று விரும்புவது பரிதபிக்கத்தக்க செயலாகும். ஆசாரத் திருத்தக்காரரென்று வைதிகர்களால் கருதப்படும் 'மகாத்மா' காந்தியே சில வருஷங்களாக "வர்ணாசிரம தர்மத்தில் உண்மையிருக்கிறது. அது அநுகூலத்திற்காகத் தான் ஏற்பட்டிருக்கிறது" என்று சொல்லிவருகிறார். இவ்வுலக வாழ்க்கையை வெறுத்தவர்களுக்கு சாஸ்திரங்களின்படி எவ்விதப் பாகுபாடும், வித்தியாசமும், நிர்ப்பந்தமும் கிடையாதென்பதையும், உலக வாழ்க்கையிலிருப்பவர்கட்கே இவ்வித வித்தியாசங்களெல்லாம் விதிக்கப்பட்டிருக்கின்றனவென்பதையும் ஒவ்வொருவரும் ஞாபகத்தில் கொள்ளவேண்டும். உபநிஷத்துக்களுடையவும் பகவத் கீதையினுடையவும் மொழிபெயர்ப்புக்களைப் படித்துவிட்டு, அதில் உலகத்தை வெறுத்தவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கும் தர்மங்களை தங்களுக்கனுகூலமாக எடுத்துக்கொண்டு, ஆசாரத் திருத்தக்காரர்கள் சாஸ்திரங்களுக்கு மதிப்புக் கொடுத்துப் பிரசாரம் செய்கிறார்கள். "மொழிபெயர்ப்புக்களை படிப்பதால் உண்மையறிய முடியாது" என்று பெரிய மொழிபெயர்ப்புக் கர்த்தராகிய மாக்ஸ் முல்லரே ஒப்புக்கொண்டிருக்கிறார். உலகத்தை வெறுத்தவர்கட்குரிய தர்மங்களை உலகத்திலுழலுபவர்கள் அனுஷ்டித்தால் கேடு வருமென்பதை இவர்களுணராமலிருப்பது வருந்தத்தக்கது. அப்படிச் செய்யவிரும்புவது, ஆகாயத்தில் பறக்கும் பட்சிகளைப் பார்த்து ஒரு மனிதன், அதற்கு மேம்பட்டவனை தான் ஏன் அக்காரியத்தை செய்யக்கூடாது

என்று துணிந்து, ஒரு மலையுச்சியிலிருந்து கீழே பறந்துவர யத்தனிப்பதற்கே ஒப்பாகும். சாஸ்திரங்களாலனுமதிக்கப் படாத சில வழக்கங்கள் சமூகத்தினிடையே புகுந்துகொண் டிருப்பது வாஸ்தவம். இவைகளைக்கொண்டு சிலர் சாஸ்திரங் களின்பேரில் குற்றம் சுமத்துகிறார்கள்.

வைதிகர்கள்

படித்தறிந்த வைதிகர்களோ, பெரும்பாலும் ஆங்கிலக் கல்வியிலும் மேற்கு தேசப் பழக்க வழக்கங்களிலும் பரிசய மில்லாதிருப்பதால் இவர்களுக்கு முன் சொன்னவர்களை காரணங்களைச் சொல்லித் திருப்திப்படுத்த முடிவதில்லை. வேத சாஸ்திரங்களில் விதித்திருப்பவைகளுக்குக் காரணங் களில்லையென்று சொல்லுபவர்களும் வைதிகர்களிடையே இன்னுமிருக்கிறார்கள், இவ்வொன்றே நம்மில் முற்போக்கு டையவர்களாகக் கருதப்படுபவர்களை (உண்மையில் பிற்போக் குடையவர்களை) சாஸ்திரங்களை அலட்சியம் செய்யும்படி விடுகிறதென்று நினைக்க இடமுண்டு. ஆனால், காரணங்களை விசாரிக்கக் கூடாதென்று சொல்லுவதிலும் உண்மையில் லாமலில்லை. ஏனெனில் ஆகாயவிமானம் கண்டுபிடிப்பதற்கு முன் ஸ்ரீராமன் லங்கையிலிருந்து ஆகாய விமானத்தில் வந்தாரென்ற கதையையும், கம்பியில்லாத் தந்தி வருவதற்கு முன் மகரிஷிகள் தூர தேச விருத்தாந்தங்களை இருந்தவிட மிருந்தே அறிந்தார்கள் என்ற கதைகளையும் இவர்கள் கற்பனை யென்று ஒரு நொடியில் தள்ளிவிடுவார்களல்லவா? கிராமோ போன் ரிகார்டுகளைப் பார்த்துங்கூட, வேதங்களை அநாதி யென்று ஒப்புக்கொள்ளத் தயங்குகிறார்களல்லவா? ஆகையால் தான், பிரத்தியட்சப் பிரமாணங்களையே ஸத்தியமென்று நம்பும் ஒரு வகையார் மேம்பாடடையும் காலம் வரப்போகிற தென்றறிந்து, மகரிஷிகள் "வேதங்களும் சாஸ்திரங்களும்

உங்களுக்கு நேரில் அறியமுடியாதவைகளைப்பற்றிச் சொல்ல வந்திருக்கின்றன. அவைகளைப் பிரத்தியட்சப் பிரமாணங் களைக்கொண்டுப் பரிசிலனை செய்யாதீர்கள்" என்று விதித் திருக்கிறார்கள்போலும்.

ஸம்ஸ்க்ருதக் கல்வி

இவைகளுக்கெல்லாம் காரணம் ஸம்ஸ்க்ருதக் கல்வி குறைவடைந்ததேயாகும். சாஸ்திரங்களெல்லாம் ஸம்ஸ்க்ருத பாஷையிலிருக்கின்றன. தேசத்தில் செல்வாக்குள்ளவர்கள் பெரும்பாலும் அப்பாஷைப் பயிற்சியற்றிருப்பதால் சாஸ்திரங் களின் மதிப்பே அவர்கட்குப் புலப்படுவதில்லை. அப்பாஷைக்கு அரசாங்க ஆதரவும் இல்லை. முன்னொரு காலத்தில் சர்வ சாதாரணமாயிருந்த அப்பாஷை இப்போது கடினமான பாஷையாகக் கருதப்படுகிறது. கி. மு. மூன்றாவது நூற்றாண்டு வரையில் அது இந்தியாவில எல்லா ஜனங்களாலும் பேசப் பட்டு வந்ததாக மாக்ஸ் முல்லர் அபிப்பிராயப்படுகிறார். பின்னும் அவர் சொல்வது சற்று ருசிகரமாயிருப்பதால் அப்படியே மொழிபெயர்க்கப்படுகிறது.

> "இந்த நிமிஷத்திலும் அதாவது இங்கிலீஷ் ஆளு கையும் இங்கிலீஷ் படிப்பும் ஏற்பட்டு ஒரு நூற்றாண்டு கழித்தும் ஸம்ஸ்கிருதமானது ஐரோப்பாவில் "டாண்டி" காலத்தில் லாடின் அறியப்பட்டதைக் காட்டிலும் மிகவும் சாதாரணமாக இந்தியாவில் அறிந்துகொள்ளப்படு கிறது."

இன்னும் இந்தியாவில் முன்காலத்தில் எப்படி ஸம்ஸ் க்ருதம் கற்கப்பட்டு வந்ததென்பதை நேரில் பார்த்த ஒரு அன்னியர் எழுதிவைத்திருப்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகவிருக்கும். புத்தமதப் புஸ்தகங்கள் சில ஸம்ஸ்

கிருதத்திலிருந்ததைத் மொழி பெயர்க்கும்பொருட்டு ஸம்ஸ் கிருதம் கற்பதற்காக சீனுவிலிருந்து "இட்சிங்" என்ற ஒரு பௌத்தர் கி. பி. 673-ம் வருஷத்தில் இந்தியாவிற்கு வந்து ஸம்ஸ்கிருதம் கற்று 695-ம் வருஷத்தில் திரும்பிப்போனாராம். அவர் இந்தியாவில் ஸம்ஸ்கிருதம் கற்கப்படும் விதத்தைப் பின்கண்டவாறு எழுதி வைத்திருக்கிறார்:—

"குழந்தைகளுக்கு ஆறு வயதானதும் 49 அக்ஷரங்களும், 10000 கூட்டெழுத்துக்களும் ஆரம்பிக்கப்பட்டு ஆறு மாதத்தில் முடித்துவிடப்படுகிறது. எட்டு வயதில் பாணினியின் இலக்தணத்தை ஆரம்பித்து எட்டு மாதங்களில் கற்றுவிடுவார்கள். அது ஸூத்ரங்களென்று சொல்லப்படும் ஆயிரம் சுலோகங்களுடையது. பிறகு தாதுக்களின் வரிசைகளும் மூன்று அனுபந்தங்களும் (கிலங்கள்) கற்கப்படுகின்றன. பத்து வயதில் ஆரம்பித்து மூன்று வருஷங்களில் முடித்துவிடுகிறார்கள். பதினைந்து வயதானதும் வியாகரண பாஷ்யத்தை ஆரம்பித்து ஐந்து வருஷங்கள் படிக்கிறார்கள். ....வேதங்கள் காகிதங்களில் எழுதப்படாமல் முகத்துக்கு முகம் ஒப்புவிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு தலைமுறையிலும் நான்கு வேதங்களையும் அதாவது ஒரு லட்சம் சுலோகங்களையும் அப்படியே ஒப்புவிக்கும புத்திமான்களான பிராம்மணர்களிருக்கிறார்கள். நானே அப்படிப்பட்டவர்களை நேரில் கண்டேன்."

பழய திண்ணைப் பள்ளிக்கூடங்கள்

20, 30 வருஷங்களுக்கு முன்புகூட திண்ணைப் பள்ளிக்கூடங்களில் ஆரம்பத்திலேயே ஸம்ஸ்கிருத, தமிழ் அக்ஷரங்களும் கூட்டெழுத்துக்களும் வரிசையாய் கற்பிக்கப்பட்டு பிறகு தான் மற்றவை சொல்லிக்கொடுக்கப்படுவது வழக்கம். பாலி

யத்திலேயே ஸ்தோத்திரங்களும், நீதி சாஸ்திரமும், அமரம் என்ற நிகண்டும், ஆத்திச்சூடி முதலிய தமிழ் நீதி நூல்களும் கட்டாயமாக கற்பிக்கப்பட்டுவந்தன. இம்மாதிரிக் கற்றவர்களுக்கு பின்னால் எல்லாக் கலைகளும் அசாதாரணமாயிருக்கும். ஸம்ஸ்கிருத பதங்களின் அர்த்தங்களையும் பால் வேற்றுமை முதலியவைகளையும் மனப்பாடம் பண்ணச் சௌகர்யமாய் அமர ஸிம்ஹர் தொகுத்திருப்பதுபோல் இதுவரை உலகத்தில் எந்த பாஷையிலும் நிகண்டு ஏற்பட்டதில்லை. இத்திண்ணைப் பள்ளிக்கூடங்களில் பயின்றவர்கள் பிறகு ஆங்கிலக் கல்வியிலும் மேம்பாடடைந்து மேற்கு தேசத்தாராலும் புகழப்படும் விதமாய்ப் பல துறைகளிலும் இப்போதும் மேன்மையாக விளங்குகிறார்கள். அப்படிப் பயின்றவர்களுக்கு, மேற்குத் தேச நாகரீகத்தில் என்னதான் முழுகிப்போனாலும் எப்பொழுதாவது ஸம்ஸ்கிருதக் கல்வியின் மேன்மை விளங்காமல் போகாது.

அக்காலத்தில் இந்தியாவில் ஆரம்பக்கல்வி நிலை எப்படியிருந்ததென்பது மேற்குத் தேசத்தாரின் கீழ்க்கண்ட சில புள்ளி விவரங்களிலிருந்து விளங்கும்.

(1) எல்பின்ஸ்டன் இந்திய சரித்திரம் பக்கம் (205) சென்னை ராஜதானியில் பொதுப் பள்ளிக்கூடங்களில் கற்கும் பிள்ளைகளின் சங்கியை மூன்றில் ஒன்றுக்குக் குறைந்ததென்று ஸர் தாமஸ் மன்ரோ குறிப்பிடுகிறார். ஆனால், அது குறைவானாலும் அவர் சொல்லுகிறபடி ஐரோப்பாவின் பல தேசங்களில் சமீப காலத்திலிருந்ததைக் காட்டிலும் அதிகமேயாகும்.

(2) (மிஷனரி இண்டெலிஜென்ஸர் IX 183—193) வங்காளத்தில் எண்பதினாயிரம் சுதேசிப் பள்ளிக்கூடங்களுக்குக் குறைவில்லாமலிருந்தன. அது சந்தேகமில்லாமல் குறைவுதான். 1835-ம் வருஷத்திய ஒரு கவர்ன்மெண்டு

ரிபோர்ட்டுப் பிரகாரம் ஒவ்வொரு 400 மனிதர்களுக்கும் ஒரு கிராமப் பள்ளிக்கூடமிருந்தது.

(3) பிரிட்டிஷ் இந்தியா 62-ல் "லட்லோ" என்பவர் எழுதுகிருர்:—பழைய மாதிரியிலிருந்த ஒவ்வொரு ஹிந்து கிராமத்திலும் பொதுவாய்க் குழந்தைகள் வாசிக்கவும் எழுதவும் கணக்குப் போடவும் தெரிந்துகொண்டிருந்தார்கள். வங்காளத்தைப்போல் பழைய கிராம ஏற்பாட்டை நாம் எங்கெல்லாம் துடைத்தோமோ அங்கெல்லாம் கிராமப் பள்ளிக்கூடங்களும் மறைந்துவிட்டன.

நவீன ஆரம்பக் கல்வி முறை

சென்ற கால் நூற்ருண்டிற்குள்ளாக ஆரம்பக் கல்வி முறையில் நவீன நாகரீகம் புகுந்து அபூர்வ மாறுபாடுகளைச் செய்துவிட்டது. முன்னைக்காட்டிலும் பன்மடங்கு பணம் செலவழிக்கப்படுகிறது. விலையுயர்ந்த கட்டிடங்களும், சாமான்களும் வேண்டப்படுகின்றன. அதிக உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுகிருர்கள். கௌன்ஸில்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. போதாக்குறைக்குக் கல்வி வரியென்று ஒரு தனி வரிச்சுமை நிலத்துக்குடையோர் தலையில் எத்தனையோ சுமைகளுக்குமேல் சுமத்தப்படுகிறது! இன்னும் என்ன செய்தாலும் ஆரம்பக்கல்வி பூர்த்தியாவதாயில்லை. ஆங்கிலேயர்களுக்குத் தமிழ் கற்பிப்பதுபோல் இந்தியருக்குத் தாய்ப் பாஷை கற்பிக்கப்படுகிறது. ஆங்கிலேய வியாபாரிகள் இக் கல்வியிலும் புகுந்து விட்டார்கள். மேலான உத்தியோகஸ்தர்களிடம் ஒப்பந்தம் செய்துகொண்டு தாங்கள் அச்சுப்போடும் புத்தகங்களைத்தான் படிக்க வேண்டுமென்கிருர்கள். உலகத்துக்கெல்லாம் உபாத்தியாயரென்று மாக்ஸ்முல்லர்

முதலிய மேற்கு தேசத்தாரே ஒப்புக்கொண்ட இந்தியருக்குத் தங்கள் பிள்ளைகளுக்குத் தாய்பாஷை சொல்லிக்கொடுக்கத் திறமையில்லையென்று ஆங்கிலேயர்களால் சொல்லிக்கொடுக்கும் விதம் கற்பிக்கப்படுகிறது. இந்தப் போதனுமுறைப் பாடசாலையில் தேர்ந்தவர்கள் தான் உபாத்தியாயராயிருக்கலாமென்று சட்டமும் செய்தாய்விட்டது.

பழைய திண்ணைப்பள்ளிக்கூட உபாத்தியாயர்களோடு ஸம்ஸ்கிருத அக்ஷரங்களின் உயிரையும் எடுத்தாய்விட்டது. ஸம்ஸ்கிருத அக்ஷரம் தெரிந்த உபாத்தியாயரே இப்போது கிடையாது. இப்புதிய பள்ளிக்கூடங்களில் பயின்றவர்களுக்கு எழுத்துக்களின் வரிசைக்கிரமமே சந்தேகம். "அகர முதலெழுத்தெல்லாம்" என்ற திருக்குறளைக்கொண்டு "அ" முதலெழுத்து என்று சித்தாந்தம் செய்யவேண்டியிருக்கிறது! பரீட்சையில் தேறும் பையன்களைப் பொறுத்து கிராண்டு கொடுத்துவந்த Result grant systemத்தையும் பழய திண்ணைப்பள்ளிக்கூட முறையைம் உயிர்ப்பித்தாலொழிய ஆரம்ப கல்வி பிரச்சினை திருப்திகரமாய் தீரப்போவதில்லை.

சம்ஸ்கிருதத்தைப்பற்றி அன்னியர்கள்

இந்தியாவில் ஸம்ஸ்கிருதப் படிப்பு இவ்வாறாகத் துடைக்கப்பட்டிருக்க மேற்குத் தேசத்தார் அதை ஸ்வீகரிக்கக் கிளம்பியிருக்கிறார்கள். சமீபத்தில் காலிபோர்னியா, பைஸா, ரோம் இந்த சர்வ கலாசாலைகளில் ஆசிரியர் பதவிகளை வகிக்கும் டாக்டர் கார்லோ பார்மிச்சி என்ற இடாலி தேசத்திய பிரஸித்த நிபுணர் அமெரிக்கா தேசத்திய சர்வ கலாசாலைகளில் சம்ஸ்கிருதக் கல்வியை விருத்திசெய்ய அமெரிக்கா செல்வத்தை விநியோகம் செய்யவேண்டுமென்று தூண்டியதிலிருந்து, அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களின் வித்யா அதிகாரிகளால்

அதிகமாய்க் கவனிக்கப்பட்டுவருவதாக மான்செஸ்டர் கார்டியன் என்ற சீர்மைப் பத்திரிகையில் பிரசுரமாயிருக்கிறது.

டாக்டர் கார்லோ பார்மிச்சி சொல்லுவதாவது:—

"ஸம்ஸ்கிருதப் படிப்பானது முதலாவதாக மகா முக்கியமானது. அமைப்பில் கிரீக் அல்லது லாடினைக் காட்டிலும் மிகவும் உத்தமமானது. மற்ற பாஷைகள் இழந்திருக்கும் தாதுக்களைக் காப்பாற்றுவதன்மூலம் மிகவும் பிரகாசமானது. மற்ற பாஷைகளில் இழக்கப்பட்ட அனேகம் வார்த்தைகளின் சொல்லிலக்கணம் சம்ஸ்கிருதத்தில் காணப்படுகிறது. எல்லா ஆர்ய பாஷைகளுக்குள்ளும் அது நீடித்திருக்கும் மேலான பாஷை. பௌராணிக சம்பந்தமாகவும், வித்யா சம்பந்தமாகவும் தத்துவ ஞான ச்ம்பந்தமாகவுமுள்ள திருஷ்டியிலும் ஸம்ஸ்கிருதம் மகா முக்கியமானது. கிரீஸ், ரோம் இவைகளின் பௌராணிகம் துண்டு துண்டானவை. அதில் இயற்கையின் வல்லமை ஏற்கெனவே உருவாகியிருந்தாலும் அதன் மூலம், மறைந்திருக்கிறது. இந்திய பௌராணிகத்திலோ உருவாக்கும் செய்கை இன்னும் நடந்துகொண்டேயிருப்பதால் எல்லாம் தெளிவாகிறது. நமது சொந்த பாஷைகளினுடைய திறவுகோலுக்காகவே நாம் சம்ஸ்கிருதத்தைச் சரணமடையவேண்டுமென்பதிலிருந்து அதன் அளவுக்கதிகமான சாஸ்திர சம்பந்த உரிமை விளங்கும்."

சென்ற செப்டம்பர் மாதத்தில் பாரீஸ் சர்வ கலாசாலையிலிருந்துவந்த ஒரு பிரெஞ்சு நிபுணர் சென்னை கோகலே ஹாலில் சம்ஸ்கிருதத்தின் பெருமையைப்பற்றி உபந்நியசித்து, அதன் பிறப்பிடத்தில் அது மதிக்கப்படாததைக்கண்டு ஆச்சரியமும் வருத்தமும்பட்டார்.

மாக்ஸ் முல்லர், கேம்ப்ரிட்ஜ் சர்வ கலாசாலையில் இந்தியன் ஸிவில் சர்வீஸ் மாணவர்களுக்கு 1882-ல் செய்த போதனையொன்றில் "நாகரீகம் என்ற சொல்லால் குறிப்பிடும் எல்லாவற்றிற்கும் மூலம் ஸம்ஸ்கிருதத்தில்தான் இருக்கிறது" என்றார்.

* * * *

விவாகச் சட்டம்

இப்போது வந்திருக்கும் சட்டங்களில் பெண்களுக்கு 14 வயதுக்கு முன் விவாகம் செய்யக்கூடாதென்று தடுத்து அப்படிச் செய்பவர்களை தண்டிக்கவேண்டுமென்பது ஒன்று. இச் சட்டத்துக்கு முக்கிய காரணங்களாகப் பெண்கள் இளம்வயதிலேயே பிள்ளைபெற்று தாயாராகிவிடுவதால் அவர்கள் சரீர பலம் குன்றிவிடுகிறதென்றும் பெண்கள் மரணமும், சிசுகள் மரணமும் அதிகரிக்கிறதென்னும் சொல்லப்படுகின்றது.

இவர்கள் சொல்லும் தீங்குகளுக்கும், பாலிய விவாகத்துக்கும் சம்பந்தமில்லையென்பதை இவர்கள் உணர்ந்ததாய்த் தோன்றவில்லை. சமீபத்தில் இந்தியாவுக்கு வந்துபோன "லண்டன் டைம்ஸ்" பத்திரிகையின் ஆசிரியர் அதையுணர்ந்து "ஹிந்துக்களின் விவாகங்கள் ஒரு நிச்சியதார்த்தமேயொழிய சீர்திருத்தக்காரர்கள் நினைக்கிறபடி உண்மை விவாகமல்ல" என்று சொல்லியிருப்பதாக சமீபத்தில் வெளிவந்திருக்கிறது.

நிற்க, விவாக வயதைப்பற்றி நமது சாஸ்திரங்கள் என்ன சொல்லுகின்றனவென்பதை இப்போது கவனிப்போம். மனுஸ்மிருதியின் 9-வது அத்தியாயத்தின் 88 முதல் 94 வரையுமுள்ள 7 சுலோகங்கள் இங்கு குறிப்பிடத்தக்கன. அவையாவன:—

१ उत्कृष्टायाभिरूपाय वराय सदृशाय च ।
अप्राप्तामपि तां तस्मै कन्यां दद्याद्यथाविधि ॥

२ काममामरणात्तिष्ठेद्गृहे कन्यर्तुमत्यपि ।
नचैवैनां प्रयच्छेत्तु गुणहीनाय कर्हिचित् ॥

३ त्रीणिवर्षाण्युदीक्षेत कुमार्यृतुमतीसती ।
ऊर्ध्वं तु कालादेतस्माद्विन्देत सदृशं पतिम् ॥

४ अदीयमाना भर्तारमधिगच्छेद्यदिस्वयम् ।
नैनं किञ्चिदवाप्नोति न च यं साधि गच्छति ॥

५ अलङ्कारं नाददीत पित्र्यं कन्या स्वयंवरा ।
मातृकं भ्रातृदत्तं वा स्तेना स्याद्यदि तं हरेत् ॥

६ पित्रे न दद्याद्शुल्कं तु कन्यामृत्वमतीं हरन् ।
स हि स्वाम्यादतिक्रामेदृतूनां प्रतिरोधनात् ॥

७ त्रिंशद्वर्षोद्वहेत्कन्यां हृद्यां द्वादशवार्षिकीम् ।
त्र्यष्टवर्षोऽष्टवर्षां वा धर्मे सीदति सत्वरः ॥

இவைகளின் பொருள் பின்வருமாறு:—

1. (ஆசாரம் சீலம் குணம் இவைகளால்) உயர்ந்தவனும் ரூபமுள்ளவனும் (ஜாதி முதலியவைகளால்) சரிசமத்வனுமுள்ளவன் (கிடைக்கும்போது அவன்) பொருட்டு (கிரமமான வயதை) அடையாதவளாயிருந்தபோதிலும் விதிப்பிரகாரம் பெண்ணைக் கொடுக்கவேண்டும்.

2. கன்னிகை ருதுவாய் மரணபர்யந்தம் தகப்பன் வீட்டிலேயே இருந்தாலும் இருக்கட்டும். குணமில்லாதவன் பொருட்டு கொடுக்கவே கூடாது.

3. விவாகம் செய்துகொடுக்கப்படாமல் ஒரு பெண் ருதுவாய்விட்டால் அவள் மூன்று வருஷகாலம் (பெற்றோர் களை) எதிர்பார்க்கவேண்டும். அக்காலத்துக்குப் பிறகு அவள் தன்னிஷ்டப்படி ஒரு புருஷனை அடையலாம்.

4. இம்மாதிரி பெற்றோர்களால் கொடுக்கப்படாமல் தானுகப் புருஷனையடைந்தால் அவளுக்காவது அவள் புருஷனுக்காவது யாதொரு தோஷமுமில்லை.

5. இப்படித் தானுகப் புருஷனை வரித்துக்கொண்ட பெண் தகப்பனுலாவது, தாயாராலாவது, சகோதரனுலாவது கொடுக்கப்பட்ட நகை முதலியவைகளை அவர்களிடத்திலேயே திருப்பிக் கொடுத்திடவேண்டும்.

அப்படிக் கொடாமல் தானே எடுத்துக்கொள்வது திருட்டுக்கொடுப்பாகும்.

6. இப்படி ருதுவான பெண்ணை விவாகம் செய்து கொள்ளும் புருஷன் பெண்ணின் தகப்பனுருக்கு ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லை. ஏனெனில் ருதுவை விணுக்கியதின் மூலம் அப்பெண்ணுக்குச் சொந்தக்காரனுயிருக்கும் அதிகாரம் அவனைவிட்டு விலகிவிடுகிறது.

7. முப்பது வயதுப்பிள்ளை மனதுக்கிசைந்த பன்னிரெண்டு வயதுப் பெண்ணை விவாகம் செய்துகொள்ளவேண்டும். கிருகஸ்த தர்மத்தில் பிரவேசிக்க அவசரப்படுபவன் இருபத்தி நான்கு வயதில் எட்டு வயதுப் பெண்ணையாவது விவாகம் செய்துக்கொள்ளலாம்.

இவைகளிலிருந்து நல்ல வரன் கிடப்பதை முதன்மையாக கவனிக்கவேண்டுமென்றும், பெண்களுக்கு ருதுவாகுமுன் விவாகம் செய்துவிடவேண்டியது அவசியமென்றும், 8

வயதுக்குமேலும் 12 வயதுக்குள்ளும் விவாகம் செய்யவேண்டியது கிரமமென்றும் பிள்ளைகளுக்கு 25 வயது கீழ் எல்லையென்றும் ஏற்படுகிறது. இவ்விதிகளையே எல்லா ஸ்மிருதி கர்த்தர்களும் ஆதரிக்கிறார்கள். வாஹடாலியற்றப்பட்ட "அஷ்டாங்க ஸங்கிரஹம்" என்ற பெரிய வைத்திய நூலின் சாரீரம் ஸ்தானம் முதலாவது அத்தியாயத்தில் விவாகத்துக்குரிய காலத்தைச் சொல்லும்போது "புமாந் ஏகவிம்சதி வர்ஷ: கந்யாம் துவாதச வர்ஷ தேசீயாம்" என்று சொல்லப்படுகிறது. அதாவது இருபத்தோரு வயதுள்ள புருஷன் பன்னிரண்டு வயது சுமாருள்ள பெண்ணை கலியாணம் செய்துகொள்ளவேண்டுமென்பதேயாகும். இவைகளிலிருந்து இச்சட்ட கர்த்தர்கள் உணரும் பாலிய விவாகத் தீங்குகளை சாஸ்திர கர்த்தர்களறியாமலில்லையென்று ஏற்படும். உதாரணமாக பிள்ளைகளின் விஷயத்தில் இச் சட்டத்தைவிட இன்னும் கடுமையாய் மகரிஷிகளின் சட்டங்களிருக்கின்றன. வைத்திய சாஸ்திரம் 21 வயதில் பிள்ளைகள் விவாகம் செய்துகொள்ள அனுமதிக்கையில் மனு 24 வயதை கீழ் எல்லையாக விதிக்கிறார்.

பிள்ளைகள் விஷயத்தில் தற்கால சீர்திருத்தக்காரர்களைவிடத் தீவிர வாதிகளாயிருக்கும் மகரிஷிகள் பெண்கள் விஷயத்தில்மட்டும் ருதுவாகுமுன் விவாகம் செய்துவிடவேண்டுமென்று வற்புறுத்துவதற்குத் தகுந்த காரணங்களிலிருந்தே தீரவேண்டும். பெரியோர்களறிந்துகொண்டவரை கீழ்க்கண்டவைதான் அதற்கு முக்கிய காரணங்கள்.

I. ஹிந்து மதத்தின் முக்கிய தத்துவமான ஸ்திரீகளின் பரிசுத்தியும் அதன்மூலம் பிரஜைகளின் பரிசுத்தத் தன்மையும் காப்பாற்றப்படவேண்டும்.

2. விவாகம், வியாபார ஒப்பந்தம்போலிராமல் சதிபதிகளின் ஒற்றுமையும், நேசமும் இளமையிலிருந்தே வளர்க்கப்பட்டு அவர்களின் ஜீவிய காலமுழுதும் சகல சுகதுக்கங்களிலும் ஒன்றுபட்டு வாழ்வதன்மூலம் அவர்களது ஜன்மாந்திர வாழ்க்கையும் பாதிக்கப்படாமலிருக்கவேண்டும்.

3. யௌவனத்தில் இயற்கையாயுண்டாகும் மிருகேச்சையினால் தட்டுக்கெட்டுத் தடுமாறும் புத்திப் போக்குக்கு இடமளிக்கக்கூடாது.

4. தற்கால நாகரீக உலகத்தில் காணப்படுகிற விவாகப் பிரிவினைக் கோர்ட்டுகளுக்கும் பிரதிதினம் பத்திரிகைகளில் வெளிவரும காதல் கொலைகளுக்கும் ஹிந்து சமூகத்தில் இடமிருக்கக்கூடாது.

5. ஹிந்து மதத்தின் பாரமார்த்திக உண்மை தற்கால நாகரீகத்தைப்போலொத்த பொய் நாகரீகத்தாலும் பிர்த்தியட்சத்தில் காணப்படும் பொய்ச் சுகங்களினாலும் பாதிக்கப்படாமல் ரட்சிக்கப்படவேண்டும்.

மேலும் "காதல்" என்றும், "அன்பு" என்றும் மேல்தேசத்தார்களே கணக்கில்லாமல் புஸ்தகங்கள் எழுதி வர்ணிக்கிறார்கள். அக்குணங்கள் ஹிந்து சாஸ்திரீய விவாகங்களிலேயே நிலைத்துநிற்கமுடியும். ஒப்பந்த விவாகங்களிலேற்படும் காதல் அதற்குரிய காரணம் பாதிக்கப்படும்போது மறைந்துவிடும். அது புத்திப்போக்கின் ஒரு பலஹீன ஸ்திதியில் ஏற்பட்டதாயிருந்தால் புத்தி நிலையடைந்தபோது மறைந்துவிடும். அல்லது மனிதர்களுக்குச் சர்வ சாதாரணமாயுள்ள இச்சை, கோபம், ஆசை, அசூயை, துவேஷம் முதலிய எந்த மனமாறுதலினாலும் சரேலென்று மாறிவிடும். அவைகளையனுபவசித்தமாய் நாகரீக உலகத்தில் பார்த்துக்கொண்டிருக்

கிரோம். இவைகளுக்கெல்லாம் ஹிந்துவிவாகங்களில் இடமில்லாமலிருக்கவேண்டியே தீர்க்காலோசனையின்பேரில் சாஸ்திர விதிகளை இயற்றியிருக்கிறார்கள்.

சென்னை ஹைகோர்ட்டு நீதிபதி ஜஸ்டிஸ் ரமேசம் சம்மத வயதுக் கமிட்டிக்கனுப்பிய தஸ்தாவேஜில் சீர்திருத்தக்காரர்கள் நினைக்கும் தீங்குகளுக்குப் பாலிய விவாகம் காரணமல்லவென்றும், பாலிய விவாகத்தால் நன்மையே விளையுமென்றும் பல மேற்கு தேச நிபுணர்களின் அபிப்பிராயங்களைக்கொண்டு நிரூபித்திருக்கிறார். அவைகளில் சிலவற்றை இங்கு குறிப்பிடுவது பொருந்தும்.

1. ஸர். ஜேம்ஸ்பார்:— பரிசுத்தமான நீண்ட வாழ்வு வாழ்வதற்காக நான் எப்போதும் பால்யத்திலேயே விவாகம் செய்துகொள்ளும்படி சிறுவர்களை வற்புறுத்திவருகிறேன்.

2. F. A. E. ருக், M. D., D. Sc., Ph. D., F. R. S. E. பால்ய விவாக முறையை நான் நல்லதெனக்கொள்கிறேன்.

3. அலட்டா ஜாகோப்ஸ், M. D., பால்ய விவாகமென்ற இந்த இலகுவான முறை *** ஒரு சமூகத்தின் சந்தோஷத்திற்கு வெகுதூரம் உதவிசெய்கிறது.

4. ஹாப்ட்ஸின் ஸ்மித், M. D., காலதாமதமான கல்யாணம் மிகவும் ஆட்சேபங்களுக்குரியது. அது ஒன்று புலன்களைக் கிரமமீறி அடக்கவாவதுவேண்டும் அல்லது துன்மார்க்கப் பிரவிருத்தி தட்டுக்கெட்ட சேர்க்கை அல்லது விரும்பத்தகாத கெட்ட வழக்கங்கள் இவைகளை உண்டுபண்ணியாவது தீரும்.

5. டாக்டர் W. J. ராபின்சன், M. D., பால்ய விவாகம் வழக்கத்துக்கு வந்துவிட்டால் துன்மார்க்கத்தின் பெரும் பாகம் குறைந்துவிடும். அதன்மூலம் வியாதிகள் குறையும்.

6. எட்வின் C வாக்கர்:- கர்ப்ப உற்பத்தியைத் தவிர்க வென்று காலங்கழித்துச் செய்யும் விவாகம், தடுக்கமுடியாத விதமாயும் அதிகமாயும் புருஷர்களுடையவும் ஸ்திரீகளுடையவும் அசாதாரண சிற்றின்ப உணர்ச்சியைத் தூண்டிவிட்டு நிச்சயமாய் துன்மார்க்க பிரவிருத்திக்கு அதிக ஆக்கமளிக்கிறது. துன்மார்க்க வியாதிகளை அதிகம் பரவச்செய்கிறது. இருபாலரையும் தனியாயிருக்கச் செய்வதன்மூலம் இயற்கையாயும் ஆரோக்கியகரமாகவுமுள்ள பரஸ்பர அன்னியோன்னியத்தைத் தடைப்படுத்துகிறது. லட்சக்கணக்கான ஜனங்களுக்கு நரம்புத்தளர்ச்சியை உண்டுபண்ணி நிலைகுலையச் செய்கிறது.

7. டாக்டர் நார்மன் ஹேர்:— ருதுவானபின் சீக்கிரமாகவே சம்பந்தம் ஏற்படுவது விரும்பத்தக்கது. அதற்கு பால்ய விவாகமே சிறந்த சாதனமென்று தற்காலம் கருதப்படுவதுடன் அது அமெரிக்காவில் வியாபகமாகிக்கொண்டும் வருகிறது. இன்னும் மேன்மேலும் விருத்தியுடன் அனுஷ்டானத்துக்கு வரக்கூடியதாயுமிருக்கிறது.

இம்மாதிரியாக பாலிய விவாகத்தை மேல்நாட்டு நிபுணர்கள் அனுஷ்டிக்க முற்பட்டு வரும்போது அது வெகு காலமாய் வேரூன்றிப்போயிருக்கும் இத்தேசத்தில் அதை யகற்ற இத்தேசத்தவர்களே விரும்புவது பெரிய துரதிருஷ்டமாகும்.

* * * *

ஸ்திரீகளுக்கு ருதுவாகுமுன் விவாகம் செய்யவேண்டுமென்பதே நமது மஹர்ஷிகளின் சித்தாந்தப்படியும் நவீன

ஆராய்ச்சிக்காரர்களின் சித்தாந்தப்படியும் அதிக நன்மை பயக்கக்கூடியதாகும்.

* * * *

ஸ்திரீ புருஷர்கள் மரணபர்யந்தம் ஒருவரைவிட்டொருவர் பிரிவதென்பது கூடாது என்று மனு விதிக்கிறார். மேலும் ஸ்திரீகளை புருஷர்கள் எப்படி ரட்சிக்கவேண்டுமென்பதை மனு 9-வது அத்தியாயம் 10 முதல் 13 ச்லோகங்களில் அடியிற் கண்டபடி விதிக்கிறார்.

"ஸ்திரீகளை பலாத்காரத்தால் ரட்சிக்க ஒருவராலும் முடியாது. ஆனால் பின்கண்ட உபாயங்களால் ரட்சிக்கமுடியும். பண வரவு செலவு, வீடு முதலியவைகளைச் சுத்தமாய் வைத்தல்; தர்ம காரியங்கள், சமையல், பாத்திரம் பண்டங்களைக் கவனித்தல் இவைகளை ஸ்திரீகள் கவனிக்கும்படி விட வேண்டும். அப்படிக்கல்லாமல் ஸ்திரீகளின் இஷ்டங்களையெல்லாம் பூர்த்திசெய்பவர்களாயிருந்தாலும் புருஷர்களால் வீட்டிலடைக்கப்பட்ட ஸ்திரீகள் ரட்சிக்கப்பட்டவர்களாக மாட்டார்கள். தன்னைத்தானே எவர்கள் ரட்சித்துக்கொள்கிறார்களோ அவர்கள்தான் ரட்சிக்கப்பட்டவராவர்கள். பானம், கெட்டவர்கள் சேர்க்கை, புருஷனைவிட்டுப் பிரிதல், நினைத்த விடம் போதல், அகாலத்தில் தூங்குவது, இதார் வீட்டில் வசித்தல் இந்த ஆறும் ஸ்திரீகளைக் கெடுக்கக்கூடியவை."

இவைகளைக்கொண்டு ஸ்திரீகளைக் குறைவாய்ப் பேசிவிட்டதாக மனுவின்பேரில் சிலர் குற்றம் சுமத்தக்கூடும். அவர்களைத் தயவுசெய்து பின்கண்ட ஒரு ஆங்கிலேய வைத்திய நிபுணரின் அபிப்பிராயத்துடன் இதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுகிறேன்.

சீமையார்க்கென்று சீமையில் பிரசுரமான "நவீன குடும்ப வைத்தியம்" என்னும் புஸ்தகத்தில் மேரீஸ் கார்லிப், M. D. M. S. என்னும் நிபுணர் யௌவனம் என்னும் தலைப்பின்கீழ் பெண்களைப்பற்றி எழுதும்போ பின்கண்டவிதம் குறிப்பிட்டிருக்கிறார்.

"பெண்களுக்கு யௌவனம் வந்ததும் என்ன நல்ல சகவாசத்திலிருந்தாலும் அவர்களெண்ணங்களில் மாறுதலுண்டாய் விடுகிறது. பெற்றோர்கள் இச்சமயத்தில் மிகவும் ஜாக்கிரதையாய் அவர்களை ரட்சிக்கவேண்டும். கல்லியாணமாகும்வரை அவர்களுக்கு அதிகப் பொறுப்பும் கடமையுமுள்ள வேலைகளை அமர்த்திக்கொடுக்கவேண்டும். அல்லாவிடில், பள்ளிக்கூடத்தை விட்டதற்கும் கல்லியாணமாவதற்குமுள்ள மத்தியகாலம் பின்னால் துக்ககரமான பலன்களையனுபவிக்கவேண்டிய கெட்ட வழக்கங்களுக்கும் சோம்பேறித்தனத்திற்கும் மனத்தளர்ச்சிக்கும் விதைபோட்ட காலமாக ஆகிவிடும்."

பெண்கள் படிப்பு விஷயமாய் அந்த டாக்டர் சொல்லுகிறார்:—"பெண்களைக் குறித்து முக்கியமாய் பேசும்போது அவர்கள் ஒரு நல்ல பெண்சாதியாகவும், நல்ல தாயாராகவும் இருக்கவேண்டுமென்பது தான் உலகத்திலுள்ள உயர்ந்த நோக்கமென்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இதை நேராகப் பெண்களுக்குச் சொல்லவேண்டுமென்பதில்லை. ஆயினும் நல்ல பெண்சாதியாயும் தாயாராயுமிருப்பதே அவர்கள் பிறந்ததற்கு அலங்காரமும் பரிபூர்ணத் தன்மையுமாகுமென்பதை இயற்கையாயறிந்து கொள்ளும்படி அவர்களை படிப்பிவித்துப் பாதுகாத்து வரவேண்டும்."

இதிலிருந்து மேற்குத்தேச நாகரீகத்தில் பிரமைகொண்ட நம்மவர்கள் இத்தேச ஏற்பாடுகளின் மேன்மையை உணர்ந்து கொள்வார்களாக!

*　　*　　*　　*

சில அசட்டு வழக்கங்கள்

சாஸ்திரங்களால் அனுமதிக்கப்படாத சில வழக்கங்கள் சமூகத்தினிடையே புகுந்துகொண்டிருக்கின்றனவென்றும், அவற்றைக்கண்டு அதுதான் சாஸ்திரமென்று நினைத்து நவீன சீர்திருத்தக்காரர்கள் சாஸ்திரங்களையே துவேஷிக்கிறார்களென்றும் முன்பு சொல்லப்பட்டது. உதாரணமாக மனுவின் அபிப்பிராயப்படி பிள்ளைகளுக்கு 25 வயதுக்கு முன்னும் வைத்திய சாஸ்திரப்படி 21 வயதுக்கு முன்னும் விவாகம் செய்வது கூடாது. அனுஷ்டானத்தில் பிள்ளைகளுக்கு குழந்தை விவாகம் வந்துவிட்டது. பெண்களுக்கும் குழந்தைப் பருவத்தில் விவாகம் செய்யும்படி மகர்ஷிகள் நிர்ப்பந்திக்கவில்லை. சுல்கம் கொடுப்பது முற்றிலும் சாஸ்திர விரோதம்.

*　　*　　*　　*

சாஸ்திரங்களின்படி மூன்று வர்ணத்தவர்களும் உபநயநம் ஆனதும் குருகுல வாசம்செய்து வித்யைகளை அப்பியசிக்க வேண்டும். வித்தியாப்பியாசம் முடிந்த பிறகுதான் விவாகம் செய்யவேண்டும். மொத்தத்தில் 36 வருஷம், முடியாவிடில் அதில் பாதி 18 வருஷம், அதுவும் முடியாவிடில 9 வருஷங்களாவது வேதாத்யயனம் செய்யவேண்டுமென்று மனு விதித்திருக்கிறார்.

*　　*　　*　　*

ஆகையால் பெண்கள் வயதை சாஸ்திரங்களுக்கு விரோதமாய் உயர்த்த நினைப்பவர்கள், சாஸ்திரங்களால் விரும்பப்

பட்டபடி பிள்ளைகளின் வயதை உயர்த்த முயற்சிப்பார்களே யானல் ரிஷிகளின் சித்தாத்தங்களுக்கும் இக்கெட்ட வழக்கங் களை அகற்றுவதற்கும் ஆதரவு தேடியவராவார்கள். பெண் களின் சிசு விவாகமும் தானுக மறைந்துவிடும். ஆனல் இவ் வழங்களை

எப்படித் தடுப்பது?

புராதன இந்தியாவில் ஸ்மிருதிகளுக்கு விரோதமாய் நடப்பவர்களை அரசாங்கத்தாரே சிட்சித்துவந்தார்கள். அதனு லேயே ஆசாரம் காப்பாற்றப்பட்டது. இப்போதோ அரசாங் கத்தார் வேறு மதத்தினராயிருப்பதால் மத விஷயங்களில் பிர வர்த்திக்கக்கூடாதென்று சொல்லப்படுகிறது. மத விஷயங் களில் தலையிடுவதில்லையென்றும் அவர்கள் பிரதிஜ்ஞை செய் திருக்கிருர்கள். ஹிந்துக்களுக்கு மத சம்பந்தமான காரியங் களில் முக்கியமானதும் முதன்மையானதும் எது என்ருல் அது விவாகமேயாகும். ஆகையால் விவாக விஷயங்களில் அரசாங்கத்தார் பிரவர்த்திப்பது பிரதிஜ்ஞையை மீறினதே யாகும்.

* * * *

தற்கால எலக்ஷன் முறையில் வரும் சட்ட சபையின் ஆதிக்கத்தில் மத சப்பந்தமான காரியங்களை விடுவது அபாய கரமேயாகும். ஆயினும் இதற்கு ஓர் வழிதோன்றுகிறது. மத விஷயமான காரியங்களில் ஆலோசனை சொல்ல சுதந்திர மான ஓர் சபையை ஏற்படுத்தவேண்டும். சம்ஸ்கிருத பாஷை யின்மூலம் சாஸ்திரங்களைக் கற்றவர்களே அதன் அங்கத்தினர் களாயிருக்கவேண்டும். வைதீக தர்மங்களுக்குப் பொறுப்பா யுள்ள மடாதிபதிகளும், அதிகக்காலம் நிலைத்திருக்கும் வைதீக தர்ம சபைகளும், பண்டித சபைகளும் இதற்குப் பிரதிநிதிகளை நியமிக்கும்படி செய்யலாம். அரசாங்கத்தாரிடமிருந்து மஹா

மஹோபாத்யாயர் பட்டம்பெற்றவர்களைப் போலொத்த பண்டிதர்களை அச்சபையின் அங்கத்தினர்களாக நியமிக்கலாம், அல்லது வேறு எந்த உசிதமான ரீதியிலாவது சாஸ்திரஜ்ஞர்களைக்கொண்ட இச்சபையின் அமைப்பு வக்கீல்களின் தர்மங்களைக் காப்பாற்ற ஏற்பட்டிருக்கும் பார் கௌன்ஸிலின் அமைப்பை ஒத்திருக்கும்படி செய்யப்படவேண்டும். சாஸ்திரீய அல்லது மத விஷயமாய் அரசாங்கத்தாரோ சட்ட சபையோ தலையிடவேண்டிய எந்தப் பிரச்னையையும் இச்சபையில் ஆலோசனைக்கு அனுப்பவேண்டும். அச்சபையின் முடிவையனுசரித்தே எந்த மத சம்பந்தமான காரியங்களும் நடத்தப்படவேண்டும். அப்போதுதான் அரசாங்கத்தார் பிரதிஜ்ஞையினின்றும் தங்களைக் காப்பாற்றிக்கொண்டவர்களாவார்கள்; பல தொந்திரவுகளும் வீண் வாதங்களும் நீங்கி நன்மையுண்டாகும். இம்முறையில் எல்லோரும் தங்கள் கவனத்தைச் செலுத்த ஸர்வேசுவரன் அனுக்கிரகிப்பாராக! சுபம்.

ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்.

Edited & Published by Sri V. Panchapakesa Ayyar, Sengalipuram
Printed by Sri S. Kalyanasundaram at the Sri Janardana Printing
Works Ltd., Town High School Road, Kumbakonam.
3—10—1955.